வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 1802 / ஆ 4 / 2021 நாள் 17–06–2021

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2021–2022ம் கல்வியாண்டிற்கு 11ம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கை – ஒன்பதாம் வகுப்பு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் பள்ளி அளவிலான மதிப்பெண் பட்டியல் தயாரிததல் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக.

பார்வை 1. அரசாணை நிலை எண் 48 பள்ளிக் கல்வி (அதே) துறை நாள் 25–02–2021
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.களண் 34462 / பிடி1 / இ1 / 2021 நாள் 09–06–2021 மற்றும் 14–06–2021

••••••

பார்வை 2ல் காணும் செயல்முறைகளின்படி 11ம் வகுப்பு மாணவர் சேர்க்கை பணிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்கனவே வழங்கப்பட்டன.

பள்ளிக் கல்வியில் 10ம் வகுப்பு முடித்து மேல்நிலைக் கல்வி பயில்வதற்கும், பல்தொழில் நுட்பக்கல்லுாாகள் ( Polytechnic Colleges ) தொழிற் பயிற்சி நிறுவனங்கள் ( Industrial Training Institutes ) மற்றும் பிற மேற்படிப்பு நிறுவனங்களில் சேருவதற்கும் 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அவசியமாகிறது.

தற்போது 2021–2022 கல்வியாண்டில் 11ம் வகுப்பில் சேர உள்ள மாணவர்கள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வும் 2019–2020ம் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வும் நடைபெறாத நிலையில் 11ம் வகுப்பு மற்றும் சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்கான சேர்க்கைப் பணிக்காக மட்டும் ஒன்பதாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அளிக்க கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகின்றன.

1. 2019–2020ம் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு பயின்ற மாணவர்கள் காலாண்டு மற்றும் அரையாண்டு ஆகிய இரண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றுள்ள நிலையில் எந்த தேர்வில் அவர்கள் அதிகப்படியான மதிப்பெண்ணை பெற்றுள்ளார்களோ அம்மதிப்பெண்ணை (The maximum mark scored in each subject either in Quarterly or Half – yearly examinations) கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.
2. காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகள் இரண்டிலும் கலந்து கொண்டு எந்த பாடத்தில் தேர்ச்சி பெறவில்லையோ அந்த பாடத்திற்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் (35) வழங்கலாம்.
3. காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகள் இரண்டிற்கும் வருகை புரியாத மாணவர்களுக்கு குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் ( 35 ) வழங்கலாம்.
4. காலாண்டுத் தேர்வுகள் அல்லது அரையாண்டுத் தேர்வுகளில் பங்கு பெற்று ஏதேனும் ஒன்றில் மட்டும் தேர்ச்சி பெற்றிருந்தால் அந்த மதிப்பெண்ணை கணக்கில் எடுத்துக் கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்ட நெறிமுறைகளை முறையாகப் பின்பற்றி மதிப்பெண்பட்டியலை வழங்கி, அதனடிப்படையிலும் நடைமுறையில் உள்ள பிற விதிகளையும் பின்பற்றி 11ம் வகுப்பு மாணவர்கள் சேர்க்கை நடத்திடுமாறு அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் 2020–2021ம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு பயின்ற அனைத்து மாணவர்களுக்கும் பார்வை 1ல் காணும் அரசாணைப்படி 10ம் வகுப்பிற்கான தேர்ச்சி சான்றிதழ் ( Pass Certificate ) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் பின்னர் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

( ஒப்பம் .................)
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்
அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும்
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.